# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 749 / 2010 / எம்சி. 8 நாள் : 27.1.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 29.01.2010 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்டம்
# ஜனவரி 2010

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 1 - ஆவராம்பாளையம் சாலை முதல் விளாங்குறிச்சி சாலை வரை - நடைபாதை அமைத்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **2** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 3 - அவினாசி சாலை திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் முதல் ஹோப் காலேஜ் நடைபாதை அமைத்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 3 – அவினாசி சாலை கோவை மருத்துவக்கல்லூரி முதல் விமான நிலைய சாலை வரை – நடைபாதை அமைத்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **4** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 2 - விளாங்குறிச்சி சாலை முதல் திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் வரை– நடைபாதை அமைத்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **5** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 30, 32 - 100 அடி சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **6** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 33 - சிவானந்தா காலனி டேங்க் சாலை உள்ளிட்ட சாலைகள் – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **7** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 18, 29 - சின்னசாமி சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **8** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 72 - ரவீந்தரநாத் தாகூர் சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **9** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 72 - தீயணைப்பு நிலைய சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 65, 66 ,70 - மேட்டுப்பாளையம் சாலை முதல் சத்தி சாலை வரை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **11** | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 30, 32, 33 - சத்தி சாலை முதல் ராஜு நாயுடு சாலை வரை– தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **12** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 11 - காமராஜர் சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **13** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 10 - மசக்காளிபாளையம் பிரதான சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **14** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 14 - நவ இந்தியா சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |

| | |
|---|---|
| **15** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 15 - சௌரிபாளையம் முதல் மசக்காளிபாளையம் வரை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **16** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 20 - பாரதியார் சாலை முதல் அவினாசி சாலை வரை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 27 - வ.உ.சி. பூங்கா அனுகு சாலைகள் – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **18** | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 41, 42 - உக்கடம் சுண்டக்காமுத்தூர் புறவழிச்சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **19** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 49, 56 - ராமமூர்த்தி சாலை மற்றும் வெங்கிடசாமி சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 34 - என்.எஸ்.ஆர். சாலை – தார் சாலை புதுப்பித்தல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **21** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – நடமாடும் கழிப்பறைகள் வாங்குதல் - மதிப்பீடு 3.46 கோடி – மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **22** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – துப்புரவுப் பணிகளை ஒப்பந்த அடையில் மேற்கொள்ளுதல் - - மதிப்பீடு 65.00 இலட்சம் – மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **23** | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **24** | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **25** | பொறியியல் பிரிவு - 2 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **26** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - வார்டு எண் 26 – பந்தய சாலையில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்கா அமைத்தல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **27** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப்பணி - அவினாசி சாலையின் இருபுறமும் நடைபாதை மற்றும் சாலையோர பூங்கா அமைத்தல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **28** | கல்விப் பிரிவு - மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடம் தோற்றுவித்தல் அரசு அனுமதி பெறுதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **29** | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - வருடாந்திர ஏல இனங்கள் - கட்டணம் மாற்றியமைத்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| **30** | பொறியியல் பிரிவு - ஆணையர் அவர்களுக்கு புதிய வாகனம் வாங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| **31** | நகரமைப்பு பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 48 – மேதவர் வீதி குடியிருப்பை புதிதாக கட்டுதல் - - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |

நன்றியுரை

## அ) திருக்குறள்

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்.**

**(குறள் -648)**

**விளக்கம்**

**வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.**

**திருவள்ளுவர்.**

---

## ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

**<u>சிறப்புத் தீர்மானம்</u>**

கோவை மாநகரில் வருகின்ற ஜுன் மாதம் 23-ம் தேதி முதல் 27-ம் தேதிவரை நடைபெற இருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை-2010ன் நினைவாக, கோயம்புத்தூர் மாநகராட்சியில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகளில் பல முக்கியமான பணிகள் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கென பிரத்யேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றில் சாலைகள் அமைத்தல், பூங்கா அமைத்தல், நடைபாதை அமைத்தல், சாலை சந்திப்புகள் மேம்படுத்துதல், நடமாடும் கழிவறைகள் அமைத்தல் முதலியவை மிகவும் முக்கிய பணிகளாக போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டு அமைக்கப்படும் பூங்காக்கள் முதலிய பணிகள், தற்போது நடைபெற்று பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ள பூங்காக்கள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் 2010-11ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும் பணிகளான பூங்கா அமைத்தல், நூலகம் மற்றும் அலுவலகம் போன்ற கட்டிடங்கள் கட்டுதல், தண்ணீர் தொட்டிகள் கட்டுதல் உள்ளிட்ட அனைத்து வகையான கட்டுமானப் பணிகளுக்கும் ‘‘உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை-2010 நினைவு’’ என்று பெயர் வைக்க மாமன்றத்தின் சார்பாக தீர்மானம் நிறைவேற்றலாம்.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 29.01.2010</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 1**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை-2010 நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள முக்கிய பிரதான சாலைகளை அழகுபடுத்தவும், வருகின்ற பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்கிற நோக்குடன் அவினாசி சாலையில் இருபுறமும் பாதசாரி நடைபாதை அமைக்க மாநகராட்சியால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வார்டு எண் 1-ல் உள்ள அவினாசி சாலையில் ஆவராம்பாளையம் சாலையிலிருந்து விளாங்குறிச்சி சாலை வரை, சாலையின் அகலத்திற்கு இடம் மற்றும் மழைநீர் வடிகால் உள்ள இடங்களில் பாதசாரி நடைபாதை அமைக்க மதிப்பீடு ரூ. 75.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு-</u> கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு கோவை 2010-ல் நடைபெற உள்ளதால் மாநகரை அழகுபடுத்தும் நோக்கோடும் பொதுமக்களுக்கு அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் வேண்டி இருப்பதால் பாதசாரி நடைபாதை அவசியம் அமைக்கப்பட வேண்டும். இதற்கான நிதியை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 150/2010/MD2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 198 நாள் 29.01.2010</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

கோயம்புத்துார் மாநகராட்சி வடக்கு மண்டலம் கோயம்புத்துாரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை-2010 நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள முக்கிய பிரதான சாலைகளை அழகுபடுத்தவும், வருகின்ற பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்கிற நோக்குடன் அவினாசி சாலையில் இருபுறமும் பாதசாரி நடைபாதை அமைக்க மாநகராட்சியால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வார்டு எண் 3-ல் உள்ள அவினாசி சாலையில் திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் முதல் ஹோப் காலேஜ் வரை, சாலையின் அகலத்திற்கு இடம் மற்றும் மழைநீர் வடிகால் உள்ள இடங்களில் பாதசாரி நடைபாதை அமைக்க மதிப்பீடு ரூ. 75.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - கோயம்புத்துாரில்வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை 2010-ல் நடைபெற உள்ளதால் மாநகரை அழகுபடுத்தும் நோக்கோடும் பொதுமக்களுக்கு அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் வேண்டி இருப்பதால் பாதசாரி நடைபாதை அவசியம் அமைக்கப்பட வேண்டும். இதற்கான நிதியை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 148/2010/MD2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 199 நாள் 29.01.2010</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

## பொருள் எண் 3

கோயம்புத்துார் மாநகராட்சி வடக்கு மண்டலம் கோயம்புத்துாரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை-2010 நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள முக்கிய பிரதான சாலைகளை அழகுபடுத்தவும், வருகின்ற பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்கிற நோக்குடன் அவினாசி சாலையில் இருபுறமும் பாதசாரி நடைபாதை அமைக்க மாநகராட்சியால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வார்டு எண் 3-ல் உள்ள அவினாசி சாலையில் கோவை மருத்துவக்கல்லூாி முதல் விமான நிலைய சாலை வரை, சாலையின் அகலத்திற்கு இடம் மற்றும் மழைநீர் வடிகால் உள்ள இடங்களில் பாதசாரி நடைபாதை அமைக்க மதிப்பீடு ரூ. 75.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - கோயம்புத்துாரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு கோவை 2010-ல் நடைபெற உள்ளதால் மாநகரை அழகுபடுத்தும் நோக்கோடும் பொதுமக்களுக்கு அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் வேண்டி இருப்பதால் பாதசாரி நடைபாதை அவசியம் அமைக்கப்பட வேண்டும். இதற்கான நிதியை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 146/2010/MD2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 200 நாள் 29.01.2010</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்துார் மாநகராட்சி

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை-2010 நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள முக்கிய பிரதான சாலைகளை அழகுபடுத்தவும், வருகின்ற பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்கிற நோக்குடன் அவினாசி சாலையில் இருபுறமும் பாதசாரி நடைபாதை அமைக்க மாநகராட்சியால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வார்டு எண் 2-ல் உள்ள அவினாசி சாலையில் விளாங்குறிச்சி சாலையிலிருந்து திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் வரை, சாலையின் அகலத்திற்கு இடம் மற்றும் மழைநீர் வடிகால் உள்ள இடங்களில் பாதசாரி நடைபாதை அமைக்க மதிப்பீடு ரூ. 75.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> -கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை 2010-ல் நடைபெற உள்ளதால் மாநகரை அழகுபடுத்தும் நோக்கோடும் பொதுமக்களுக்கு அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவும் வேண்டி இருப்பதால் பாதசாரி நடைபாதை அவசியம் அமைக்கப்பட வேண்டும். இதற்கான நிதியை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும், அனுமதிக்கலாம்.

ந.க.எண். 147/2010/MD2

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண் 201 நாள் 29.01.2010**</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண்.30 மற்றும் 32ல் 100 அடி சாலையில் சக்தி சாலை முதல் பவர் ஹவுஸ் சாலை வரை தார்சாலையை புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.53,75,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஜுன் மாதம் நடைபெற இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி அவினாசி சாலையை சென்றடையும் பிரதான சாலைகளில் இதுவும் ஒன்றாகும். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி இச்சாலை பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்த உள்ளதால் இச்சாலை புதுப்பிக்க அவசியமாகிறது.

எனவே, அவசியம் கருதி மேற்படி சாலையை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.53,75,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க. எண். 14485/2009/எம்.டி2

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண் 202 நாள் 29.01.2010**</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பிரிவு எண்.4 வார்டு எண்.33ல் சிவானந்தா காலனியில் உள்ள டேங்க் சாலை, ராஜு சாலை (105 அடி சாலை) வள்ளுவர் வீதி ஆகிய பகுதியில் தார் சாலையைப் புதுப்பித்தலுக்காக மதிப்பீடு ரூ.54,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஜுன் மாதம் நடைபெற இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி அவினாசி சாலையை சென்றடையும் பிரதான சாலையாக இருப்பதாலும், உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி இச்சாலை பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்த உள்ளதால் இச்சாலை புதுப்பிக்க அவசியமாகிறது.

இச்சாலையை புதுப்பிக்கத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு -</u> அனுமதிக்கலாம் ந.க.எண். 14481/2009/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 203 நாள் 29.01.2010</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் - பொறியியல் பிரிவு வார்டு எண் 18 & 29 ல் உள்ள சின்னசாமி சாலையில் உள்ள தார் தளத்தை புதுப்பித்தல் (சத்தி சாலை முதல் பரமேஸ்வரன் பிள்ளை சாலை வரை) உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி இச்சாலை பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்த உள்ளதால் இச்சாலை புதுப்பிக்க அவசியமாகிறது.

இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.56,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க. எண். 14232/2009/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 204 நாள் 29.01.2010</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்72-க்குட்பட்ட ரவீந்தரநாத் தாகூர் சாலையில் தார்சாலைகளை புதுப்பித்தல் பணிக்கு ரூ.64,50,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டுதல்.

வரும் ஜுன் மாதம் (2010)ல் நடைபெற இருக்கும் செம்மொழி மாநாட்டுக்கு அனைத்துப் பகுதிகளிலிருந்து வரும் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அவினாசி சாலைக்கு செல்லும் இணைப்புச் சாலையாக ரவீந்தரநாத் தாகூர் சாலை இருப்பதால் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி இச்சாலை பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்த உள்ளதால் இச்சாலை புதுப்பிக்க அவசியமாகிறது. மேற்படி சாலையை செப்பனிட ஆய்வுக்கூட்டத்தில் இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க. எண். 14543/2009/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 205 நாள் 29.01.2010</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பிரிவு எண் II-ல் வார்டு எண்.72க்குட்பட்ட காந்தி மாநகரில் தீயணைப்பு நிலையம் முதல் கௌதம புரி வரையிலுள்ள தார் சாலைகளை புதுப்பித்தல் பணிக்கு ரூ.75,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஜுன் மாதம் (2010)ல் நடைபெற இருக்கும் செம்மொழி மாநாட்டுக்கு அனைத்துப் பகுதிகளிலிருந்து வரும் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அவினாசி சாலைக்கு செல்லும் இணைப்புச் சாலையாக இருப்பதால் இச்சாலைகள் மிகவும் பல இடங்களில் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி இச்சாலை பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்த உள்ளதாலும் இச்சாலை புதுப்பிக்க அவசியமாகிறது. மேற்படி சாலையை செப்பனிட இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க. எண். 14242/2009/எம்.டி2

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 206 நாள் 29.01.2010</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.66,65,70க்குட்பட்ட சங்கனூர் சாலையில் மேட்டுப்பாளையம் சாலை முதல் சத்தி சாலை வரையுள்ள தார் சாலையை புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 75,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஜுன் மாதம் நடைபெற இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி அவினாசி சாலையைச் சென்றடையும் பிரதான இணைப்பு சாலைகளில் இதுவும் ஒன்றாகும். அனைத்துப் பகுதிகளிலிருந்து உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி இச்சாலை பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்த உள்ளதால் இச்சாலை புதுப்பிக்க அவசியமாகிறது. எனவே அவசியம் கருதி மேற்படி சாலையை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 75,00,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க.எண். 14491/2009/எம்.டி2

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 207 நாள் 29.01.2010</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.30, 32 மற்றும் 33க்குட்பட்ட டாக்டர்.இராதாகிருஷ்ணா சாலையில் சத்தி சாலை முதல் ராஜு நாயுடு சாலை வரை தார் சாலையை புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 71,00,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் ஜுன் மாதம் நடைபெற இருக்கும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி அவினாசி சாலையைச் சென்றடையும் பிரதான இணைப்பு சாலைகளில் இதுவும் ஒன்றாகும். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி இச்சாலை பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்த உள்ளதால் இச்சாலை புதுப்பிக்க அவசியமாகிறது.

எனவே அவசியம் கருதி மேற்படி சாலையை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 71,00,000/- க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - அனுமதிக்கலாம் ந.க. எண். 14484/2009/எம்.டி2

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 208 நாள் 29.01.2010</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் - பிரிவு 2 – வார்டு எண் 11ல் உள்ள வரதராஜபுரம் பிரதான சாலையில் காமராஜர் சாலை சந்திப்பிலிருந்து மேற்க்காக தார் தளம் பலப்படுத்துதல் பணியானது 2010 ம் ஆண்டு நடைபெற உள்ள உலக தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு மக்கள் வருகை அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் சாலை போக்குவரத்து உபயோகம் அதிகப்படியாக இருக்கும் என்பதாலும், சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலையை செப்பனிடுவது அவசியமாக உள்ளதால் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மதிப்பீடு ரூ. 65,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 3/2010/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 209 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் - பிரிவு 2 – வார்டு எண். 10ல் உள்ள உப்பிலிபாளையம் காந்தி நகரிலிருந்து மசக்காளி பாளையம் பிரதான சாலையில் மறுதார் தளம் அமைத்தல் பணியானது 2010 ம்ஆண்டு நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு மக்கள் வருகை அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் சாலை போக்குவரத்து உபயோகம் அதிகப்படியாக இருக்கும் என்பதாலும், சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலையை செப்பனிடுவது அவசியமாக உள்ளதால் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மதிப்பீடு ரூ. 67,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண். 1/2010/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 210 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் - பிரிவு 3 – வார்டு எண். 14ல் உள்ள நவ இந்தியா சாலையில் மறுதார் தளம் அமைத்தல் பணியானது 2010 ம்ஆண்டு நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு மக்கள் வருகை அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் சாலை போக்குவரத்து உபயோகம் அதிகப்படியாக இருக்கும் என்பதாலும், சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலையை செப்பனிடுவது அவசியமாக உள்ளதால் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மதிப்பீடு ரூ. 75,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண். 07/2010/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 211 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் - பிரிவு 3 – வார்டு எண். 15ல் உள்ள சௌரிபாளையம் பிரதான சாலையிலிருந்து மசக்காளிபாளையம் வரை மறுதார் தளம் அமைத்தல் பணியானது 2010 ம்ஆண்டு நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு மக்கள் வருகை அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் சாலை போக்குவரத்து உபயோகம் அதிகப்படியாக இருக்கும் என்பதாலும், சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலையை செப்பனிடுவது அவசியமாக உள்ளதால் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மதிப்பீடு ரூ. 67,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 08/2010/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 212 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் - பிரிவு 4 – வார்டு எண். 20ல் உள்ள பாலசுந்தரம் சாலையில் பாரதியார் சாலை முதல் அவினாசி சாலை வரை மறுதார் தளம் அமைத்தல் பணியானது 2010 ம் ஆண்டு நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கு மக்கள் வருகை அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் சாலை போக்குவரத்து உபயோகம் அதிகப்படியாக இருக்கும் என்பதாலும், சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலையை செப்பனிடுவது அவசியமாக உள்ளதால் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மதிப்பீடு ரூ. 60,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 05/2010/எம்.டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 213 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 17

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - பிரிவு எண்.II வார்டு எண்.27-ல் உள்ள வ.உ.சி. பூங்கா அணுகுசாலைகள் நகரின் மிகவும் முக்கியமான சாலைகளாகும். மேலும், 2010-ல் நடக்கவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு மக்கள் இச்சாலைகளை அதிகம் பயன்படுத்துவதாகவும் உள்ளது. எனவே, இச்சாலைகளை செப்பனிடுவதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 75.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 15296 / 2009/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 18

கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண் V வார்டு எண்கள். 41 மற்றும் 42-ல் உள்ள உக்கடம் சுண்டாக்காமுத்தூர் புறவழி சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் கனரக வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக உள்ளது. மேலும் சாலைகளில் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பாக உள்ளதாலும், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதாலும், பொதுமக்கள் அதிகம் உபயோகிப்பதால் மேற்படி தார்சாலையை புதுப்பிக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. எனவே, மேற்படி தார்சாலையை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 60.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 746 / 2010/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 215 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 19

பொருள் - கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு எண்.III வார்டு எண்.56,49க்கு உட்பட்ட ராமமூர்த்தி சாலை மற்றும் வெங்கிடசாமி சாலையை புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ 51.85 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டுதல் - குறித்து

ராமமூர்த்தி சாலை, தேசிய நெடுஞ்சாலையான பேரூர் பிரதான சாலையையும் சொக்கம்புதூர் பிரதான சாலையை இணைக்கும் முக்கியமான சாலையாகும். இங்கு கனரக வாகனங்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல் அதிகமான காரணத்தினால் சாலை பழுது ஏற்பட்டு மழைக் காலங்களில் போக்குவரத்து செல்ல முடியாத நிலை உருவாகிறது. மேலும், இச்சாலை கடந்த ஏப்ரல் 2000-ல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீடு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்காக வரும் பொதுமக்கள் உபயோகத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாலையை புதுப்பிக்க மதிப்பீடு ரூ 51.85 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 425 / 2010/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

பொருள் - கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு - வார்டு எண்.34 – என்.எஸ்.ஆர். சாலையில் மறுதார்தளம் அமைத்தல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ75.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.

மேற்படி சாலை பேருந்து வழித்தட சாலையாகும். மேற்படி சாலை பழுதடைந்து குண்டும் குழியுமாக இருப்பதாலும், வார்டு மாமன்ற உறுப்பினர் தனது கடிதம் நாள் 22-05-2009-ல் மறுதார்தளம் அமைக்க கோரியுள்ளபடியாலும், மேற்படி பணிக்கு 2009-2010-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாலும், வரும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010-ல் நடைபெற உள்ளதால் பொதுமக்கள் அதிகம் உபயோகப்படுத்தும் சாலையாக இருப்பதாலும் மேற்படி சாலைப் பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6467 / 2009/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோவை மாநகரில் வரும் ஜீன் 2010-ஆம் ஆண்டு நடைபெற உள்ளதனை முன்னிட்டு முக்கிய தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், மாநாட்டில் பங்கேற்போர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பயன் படுத்த தேவையான நடமாடும் கழிவறைகள் வாங்குவது - சம்பந்தமாக.

பார்வை : 1. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு சிறப்பு அலுவலர் கூட்ட நடவடிக்கை நாள்: 14-11-2009, கடித எண்:3/2009, தேதி: 23-11-2009

2. ஆணையரின் உத்திரவு நாள் : 20-01-2010

3. சுகாதாரக்குழு தீர்மான எண் : 96 நாள்: 22-01-2010

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை மாநகரில் வரும் ஜீன் மாதத்தில் நடைபெற உள்ளதனை முன்னிட்டு பார்வை 1 ல் கண்ட உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு சிறப்பு அலுவலர் அவர்கள் கடந்த 14-11-2009 நடத்திய கூட்டத்தில் இம்மாநாட்டிற்கு வருகை தரவுள்ள சர்வதேச தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், மாநாட்டில் பங்கேற்போர் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்கு தேவையான 50 எண்ணிக்கைகள் நடமாடும் கழிவறைகள் வாங்க தீர்மானிக்கப்பட்டது.

அதன் பேரில் முக்கிய பிரமுகர்கள் பயன் பாட்டிற்காக 5 எண்ணிக்கைகள் நடமாடும் கழிவறைகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 45 எண்ணிக்கைள் நடமாடும் கழிவறைகளை வாங்குவதற்கு, பார்வை 2-ல் கண்ட ஆணையரின் குறிப்பில் அனுமதி வழங்கியுள்ளார். மேற்படி 50 எண்ணிக்கைகள் நடமாடும் கழிவறைகளை வாங்க உத்தேச செலவீனம் ரூ.3,45,62,052/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய 50 எண்ணிக்கைகள் நடமாடும் கழிவறைகளை உத்தேச மதிப்பீடு ரூ.3.46 கோடியில் வாங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாக அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி சுகாதாரக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் சுகாதாரக்குழு தனது தீர்மான எண்:96, நாள்:22-01-2010ல் மேற்படி பொருளினை அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

எனவே 50 எண்ணிக்கைகள் நடமாடும் கழிவறைகளை உத்தேச மதிப்பீடு ரூ.3.46 கோடியில் வாங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாக அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் e.f.vz] 613/2010/vk].o.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் 29.01.2010</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 22

பொருள் : உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோவை மாநகரில் வரும் ஜீன் 2010-ஆம் ஆண்டு நடைபெற உள்ளதனை முன்னிட்டு கோவை மாநகர் மற்றும் மாநாடு நடைபெறும் பகுதியில் துப்புரவுப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் பணி – சம்பந்தமாக

பார்வை : 1. உலகத் தமிழச் செம்மொழி மாநாடு சிறப்பு அலுவலர் கூட்ட நடவடிக்கை நாள்: 14-11-2009, கடித எண்:3/2009, தேதி: 23-11-2009

2. ஆணையரின் உத்திரவு நாள் : 20-01-2010

3. சுகாதாரக்குழு தீர்மான எண் : 95, நாள்: 22-01-2010

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவை மாநகரில் வரும் ஜீன் மாதத்தில் நடைபெற உள்ளதனை முன்னிட்டு கோவை மாநகர் மற்றும் மாநாடு நடைபெறும் பகுதியில் சுகாதாரப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளும் பணிக்கு ரூ.65,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சியில் தற்சமயம் துப்புரவுப் பணியாளர் பற்றாக்குறை உள்ளதால், தனியார்மூலம் இப்பணியை மேற்கொள்ளுவது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்கூறிய பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.65,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும், அதற்கு உண்டாகும் செலவினத்தை அரசு நிதியினை எதிர்நோக்கி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி பெற சுகாதாரக் குழுவின் பரிந்துரை வேண்டி பொருள் வைக்கப்பட்டது. சுகாதாரக் குழு தனது தீர்மான எண்:95 நாள்:22-01-2010ல் மேற்கூறிய பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி பெற பரிந்துரை செய்துள்ளது.

எனவே இப்பணிக்கான மதிப்பீடு ரூ.65,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும், அதற்கு உண்டாகும் செலவினத்தை அரசு நிதியினை எதிர்நோக்கி மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம் e.f.vz] 532/2010/vk].o.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 219 நாள் 29.01.2010**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சி கோயம்புத்தூர் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கடந்த 08.01.2010 அன்று திறனாய்வு செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14359/09 எம்.டி.3 | வார்டு எண் 28 தேசபந்து வீதி மாளவியா வீதி மற்றும் அன்சாரி வீதியில் தார் தளம் அமைத்தல் | 10.00 | 06.01.2009 முதல் அழைப்பு | திரு.கே. நடராஜன் | 4.26% அதிகம் |
| 2 | 2468/09 எம்.டி.3 | வார்டு எண் 18ல் பி.கே.ஆர்.நகரில் சிறுவர் விளையாட்டு திடல் மற்றும் பூங்கா அமைத்தல் | 10.00 | 06.01.2009 முதல் அழைப்பு | திருமதி. பி. லட்சுமி | 0.03% அதிகம் |

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீடு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 11694/09 எம்.டி.3 | வார்டு எண் 18 ஆவாரம்பாளையம் சாலை பெண்கள் பாலிடெக்னிக் முதல் BPL கார்னர் வரை மூடுபலகையுடன் மழைநீர் வடிகால் கட்டுதல் | 10.00 | 06.01.2009 முதல் அழைப்பு | தி/ள்.சப்தகிரி போர்வெல்ஸ் | 4.39% அதிகம் |
| 4 | 10213/09 எம்.டி.3 | வார்டு எண்.53 வடக்கு வீட்டு வசதி வாரியத்தில் உள்ள சத்யா நகருக்கு தார் சாலை அமைத்தல் | 7.15 | 07.01.2009 முதல் அழைப்பு | தி/ள்.குரு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.94% அதிகம் |
| 5 | 9642/09 எம்.டி.3 | வார்டு எண்17 கே.கே.நகருக்கு தார் சாலை அமைத்தல் | 6.50 | 07.01.2009 முதல் அழைப்பு | தி/ள்.குரு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.94% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு: மேற்கண்டுள்ள ஐந்து பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற்று மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.**

ந.க.எண்: 14359/09/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 220 நாள் 29.01.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 24

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் குடிசை மேம்பாட்டு அபிவிருந்தி திட்டத்தில் கீழ்கண்ட அபிவிருத்திப்பணிகளுக்கு 12-01-2010-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 20-01-2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| **BSUP** | | | | | | |
| 1 | **1120**/09/ எம்.டி.2 | வார்டு எண்-21-ல் உள்ள மாரியம்மன் கோயில் வீதியில் பாதாள சாக்கடை குழாய் அமைத்தல் | 2.10 | 12-01-2010 எட்டாம் அழைப்பு | திரு.டி. பாலசுப்பிரமணியம் | **0.03%** அதிகம் |
| 2 | **1121**/09/ எம்.டி.2 | வார்டு எண்-10-ல் உள்ள ஈ.எஸ்.ஐ. பெரியார் நகர் பகுதியில் குடிநீர் குழாய் பதித்தல் | 1.60 | 12-01-2010 எட்டாம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | **4.89%** அதிகம் |
| 3 | **1106**/09/ எம்.டி.2 | வார்டு எண்-21-ல் உள்ள அந்தோணியார் கோயில் வீதியில் குடிநீர் குழாய் பதித்தல் | 3.00 | 12-01-2010 எட்டாம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | **3.30%** அதிகம் |
| 4 | **1117**/09/ எம்.டி.2 | வார்டு எண்-21-ல் உள்ள மாரியம்மன் கோயில் வீதியில் குடிநீர் குழாய் பதித்தல் | 2.00 | 12-01-2010 எட்டாம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | **1.22%** அதிகம் |
| 5 | **1119**/09/ எம்.டி.2 | வார்டு எண்-21-ல் உள்ள ரெட்ஃபீல்டு பகுதியில் குடிநீர் குழாய் பதித்தல் | 4.25 | 12-01-2010 எட்டாம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | **4.91%** அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 1120/09/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 221 நாள் 29.01.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 25

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 19-01-2010 கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 20-01-2010 பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **10932**/09/ எம்.டி.4 | **மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.62 அழகண்ணன் வீதியில் குடிநீர் மேல்நிலை தொட்டி மற்றும் நூலகம் கட்டுதல்** | 20.00 | 19.01.2010 முதல் அழைப்பு | திரு/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.84 அதிகம் |
| 2 | **17807**/09/ எம்.டி.2 | **வார்டு எண்.11-க்குட்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு வளாக சாலை மற்றும் மசூதி சாலையில் காமராஜ் சாலை சந்திப்பு முதல் திருச்சி சாலை சந்திப்பு வரை தார் தளம் அமைத்தல்** | 19.20 | 19.01.2010 முதல் அழைப்பு | திருமதி. எம். சரோஜினி | 4.28 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மேற்படி பணிகளை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணிவிதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 10932/08/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 222 நாள் 29.01.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 26

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.26-க்குட்பட்ட பந்தைய சாலையில் உள்ள நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தினசரி காலை மற்றும் மாலை நேரங்களில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் நடைபயிற்சி செய்து பயன்பெற்று வருகின்றனர். இச்சாலையானது மாநகராட்சியில் மிகவும் முக்கியமான இடங்களில் ஒன்றாகும். முக்கிய மைய மற்றும் மாநில அரசு அலுவலகங்கள் செயல்படுவதுடன் முக்கிய அரசு அலுவலர்களின் குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதியாகும்.

மேற்படி பந்தைய சாலையில் தனியார் பங்களிப்புடன் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்கள் சரியான முறையில் பராமரிப்பு செய்யப்படாததால் மேற்படி இடங்களில் புல் புதர்கள் முளைத்தும், சில பகுதிகளில் நடைபாதை உடைந்தும் காணப்படுகின்றன. மேலும் அவ்விடங்களில் போதிய தெருவிளக்குகள் இல்லாத காரணத்தினால் சமூக விரோத செயல்கள் ஏற்படுவதுடன் பொது மக்களிடமிருந்து இம்மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேற்படி பந்தைய சாலையினை இம்மாநகராட்சியால் பராமரிப்புப் பணி செய்யும் பட்சத்தில் ரூ.200.00 இலட்சங்கள் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினம் மாநகராட்சிக்கு மிகப்பெரிய நிதிச்சுமை ஏற்படுத்தும்.

எனவே, மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டும் வரும் ஜூன் மாதம் கோவை நகரில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாட்டினை முன்னிட்டும் பந்தைய சாலையில் நிறுவப்பட்டுள்ள நடைபாதை மற்றும் சாலையோரப் பூங்காவினை தனியாார் பங்களிப்புடன் சீரமைத்து புதிய அலங்கார விளக்குகளின் கூடிய மின்கம்பங்கள் அதனை மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் **Tamil Nadu Urban Local Bodies Licensing of Hoardings and Levy and Collection of Advertisement Tax Rules, 2003**-ல் அறிவுறுத்தப்பட்டுள்ள கூறுகளின் அடிப்படையில் தனியார் நிறுவனங்களிடமிருந்து விருப்பக் கேட்பறிக்கை (**Expression of Interest**) கடந்த 19-01-2010 அன்று கோரப்பட்டத்தில் கீழ்கண்ட இரண்டு தனியார் விளம்பர நிறுவனங்களிடமிருந்து பிரேரணைகள் பெறப்பட்டன.

1. தி/ள். வாண்டேஜ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட், சென்னை-2
2. தி/ள்.ரேடியன்ஸ் மல்டிமீடியா (இந்தியா) பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்-25

பெறப்பட்ட இரண்டு பிரேரணைகளை இம்மாநகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி திறானய்வுக்குழுவினர்களால் திறனாய்வு செய்யப்பட்டதில் தி/ள்.வாண்டேஜ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட் சென்னை நிறுவனத்தார் கொடுத்துள்ள பிரேரணை தொழில்நுட்ப ரீதியாகவும், முன்அனுபவ ரீதியாகவும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் தகுதியுடையதாக உள்ளதென அறிக்கை சமர்ப்பித்துள்ளதுடன் மேற்கூறிய தி/ள்.வாண்டேஜ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட் சென்னை, நிறுவனத்தார் கொடுத்துள்ள பிரேரணையினை மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

எனவே வார்டு எண்.26-க்குட்பட்ட பந்தைய சாலையில் நிறுவப்பட்டுள்ள நடைபாதை மற்றும் சாலையோரப் பூங்காவினை தனியார் பங்களிப்புடன் சீரமைத்து அதனை மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் **Tamil Nadu Urban Local Bodies Licensing of Hoardings and Levy and Collection of Advertisement Tax Rules, 2003**-ல் அறிவுறுத்தப்பட்டுள்ள கூறுகளின் அடிப்படையில் தி/ள்.வாண்டேஜ் அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட் சென்னை நிறுவனத்தார் கொடுத்துள்ள பிரேரணையினை ஏற்று மாமன்றத்தின் ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் **15081/2009**/எம்.டி2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 223 நாள் 29.01.2010</u>**

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 27

**பொருள் :** உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அவினாசி சாலையின் இருபுறமும் 3.00 மீட்டர் அகலத்திற்கு மேற்பட்ட சாலை ஓரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தனியார் பங்களிப்புடன் அமைத்தல், மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு விருப்பு கேட்பு அறிக்கை (Expression of Interest) கோரி பணி மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

**பார்வை**
1. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு சிறப்பு அலுவலர் கூட்ட நடவடிக்கை நாள் 14-11-2009, கடிதம் எண். 3 / 2009 நாள் 23-11-2009.
2. ஆணையாளரின் உத்திரவு நாள் 24-12-2009.

கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் 2010-ல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு அவினாசி சாலையில் உள்ள கொடிசியா அரங்கத்தில் நடைபெற இருப்பதால் மாநகரில் உள்ள பிரதான சாலைகளை மேம்படுத்தவும், பாதசாரிகள் சாலையை கடக்கவும், பாதுகாப்பாக செல்லவும் நடைபாதை அமைக்கவும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான தனி அலுவலா் அவா்கள் கடந்த 14-11-2009 அன்று நடத்திய கலந்தாய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அதனடிப்படையில், அவினாசி சாலை மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானதால் மேற்படி சாலையோரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தனியாா் பங்களிப்புடன் அமைத்தல், மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு மாநகராட்சியால் விருப்பு கேட்பு அறிக்கை (Expression of Interest) கோரி பணி மேற்கொள்ளலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, அவினாசி சாலையில் இருபுறமும் தனியாா் இடத்திற்கும் தாா்சாலைக்கும் இடையே 3.00 மீட்டா் அகலத்திற்கு மேற்பட்ட சாலையோரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தனியாா் பங்களிப்புடன் அமைத்து அதனை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்க கீழ்கண்ட இடங்கள் தோ்வு செய்து ஐந்து சிப்பங்களாக

<u>அவினாசி சாலை – வடக்கு பகுதி</u>

1. அண்ணா சாலை முதல் ரெசிடென்சி ஹோட்டல் வரை
2. குப்புசாமி மருத்துவமனை முதல் பாரதியாா் சாலை வரை
3. திருப்பூா் டெக்ஸ்டைல்ஸ், பாலம் முதல் பி.கே.டி. நகா் - தெரு எண்.1 வரை
4. டைடல் பூங்கா முதல் காளப்பட்டி சாலை (விமான நிலையம் சாலை) வரை (வடக்கு மற்றும் தெற்கு பாகம்)

<u>தெற்கு பகுதி</u>

5. நீல்கிரி ஸ்டோா்ஸ் முதல் காமராஜா் சாலை வரை

மேற்கூறிய ஐந்து சிப்பங்களில் குறிக்கப்பட்டுள்ள சாலையோர பகுதிகளில் தடுப்பு சுவா், மழைநீா் வடிகால் மூடுபலகையுடன் நடைபாதைகள் மற்றும் சாலையோர பூங்காக்களை அமைத்து அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் கொடுத்து அவற்றினை பராமரிக்க தனியாா் நிறுவனங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ள விருப்ப கேட்பு அறிக்கை (Expression of Interest) கோரலாம்.

மேற்படி அவினாசி சாலையில் இருபுறமும் தடுப்பு சுவா், மழைநீா் வடிகால் மூடுபலகையுடன் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை மாநகராட்சியால் அமைக்கும் பட்சத்தில் உத்தேசமாக மதிப்பீடு ரூ 9.15 கோடி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவிலும் இம்மாநகராட்சிக்கு கூடுதல் நிதி சுமை ஏற்படுத்தும்.

எனவே, மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டும் வரும் ஜுன் மாதம் கோவை மாநகரரில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை முன்னிட்டும் அவினாசி சாலை மாநில நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானதால் மேற்படி சாலையோரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தனியாா் பங்களிப்புடன் அமைத்தல், மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு மாநகராட்சியால் விருப்பு கேட்பு அறிக்கை (Expression of Interest) கோரி பணி மேற்கொள்ள இப்பணியை தனியாா் நிறுவனங்கள் மூலம் மாநகராட்சியில் வடிவமைப்பு குறிப்பிடும் அளவீடுகள், தரத்திற்கும் ஏற்ப கட்டி பராமரித்து மாநகராட்சி குறிப்பிடும் அளவீடுகளுக்கு விளம்பரங்கள் (தமிழ்நாடு அரசு உள்ளாட்சிகள் விளம்பரப் பலகைகள் உரிமம் சட்டம் ( Tamil Nadu Urban Local Bodies Licencing of Hoardings and Levy and Collection of Advertisement Tax Rules Act 2003) தெரிவித்துள்ளவாறு செய்து கொள்ளவும் மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் உரிமையும் தேவையெனில், உரிமம் நீட்டிப்பும் வழங்கப்படும் என்கிற நிபந்தனை பேரில் வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம் ந.க.எண். 15293 / 2009/ எம்.டி.2

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 224 நாள் 29.01.2010</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 28

பொருள்: நிர்வாகம் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடத்திற்கு அயற்பணியில் அலுவலர் நியமிக்க புதியதாக கல்வி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்க கோருதல் சார்பு.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் 16 மேல்நிலைப் பள்ளிகள், 10 உயர்நிலைப்பள்ளிகள், 1 நடுநிலைப்பள்ளி, 12 உயர் தொடக்கப் பள்ளிகள், 45 ஆரம்பப்பள்ளிகள் மற்றும் காதுகேளாதோருக்கான ஒரு சிறப்புப் பள்ளி என மொத்தம் 85 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 976 ஆசிரியர்கள் மற்றும் 196 ஆசிரியரல்லாத பணியாளர்கள் பணி செய்து வருகின்றனர். இவ்வாசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களது நிர்வாகம் பணிகள் மாநகராட்சி கல்வி அலுவலர் அவர்களது கண்காணிப்பின் கீழ் நடைபெற்று வருகிறது.

மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் 01.06.1986 முதல் அரசுப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டு, 01.05.1990 முதல் அவர்களது ஊதியத்தை மாவட்டக் கருவூலம் மற்றும் சார் கருவூலகங்களில் பெற்று வருகின்றனர். மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் பணிவிதிகள் வகுக்கப்படாததால் அரசு பள்ளி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் பணிவிதிகள் பின்பற்றப்பட்டு வருகிறது.

கடந்த மார்ச் 1988 முதல் மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடம் காலியாக உள்ளது. அதுவரை “ நகராட்சி கல்வி அலுவலர்” (Municipal Education Officer) பதவி வகித்த அலுவலர் கல்விப் பிரிவு பணிகளை கவனித்து வந்தார். மார்ச் 1988க்குப் பிறகு கோயம்புத்தூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களில் பணிமூப்பில் மூத்த தலைமையாசிரியர் மாநகராட்சி கல்வி அலுவலர் பணியினை (Working arrangement) முறையில் கவனித்து வருகிறார்.

மாநகராட்சி பள்ளிகளில் பெருகி வரும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எண்ணிக்கையின் காரணமாக மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடத்திற்கு நிரந்தரமாக ஒரு அலுவலர் அவசியமாவதால், இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2072/09/கே7, நாள்.15.05.09ன்படி மாநகராட்சி கல்வி அலுவலர் பணியிடத்திற்கு அயற்பணியில் (Foreign Service) அலுவலர் ஒருவரை நியமிக்க சென்னை, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களை கோரப்பட்டது.

பள்ளிக் கல்வி இயக்குநர் தமது ந.க.எண்.41328/ஏ1/இ1/2009, நாள்.24.08.2009ன்படி “ கோவை மாநகராட்சியின் கீழ் உள்ள பள்ளிகளுக்கு என நகராட்சி நிர்வாக இயக்குநரின் மூலமாக கோவை மாநகராட்சிக்கு புதியதாக கல்வி அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும். அவ்வாறு கோவை மாநகராட்சிக்கென புதியதாக கல்வி அலுவலர் பணியிடம் பெறும் நிலையில், பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக மாவட்டக் கல்வி அலுவலர் பணி நிலையில் உள்ள அலுவலரை பள்ளிக் கல்வித் துறையின் அரசாணையின் வாயிலாக நியமனம் செய்ய வழி வகை உள்ளது” என தெரிவித்துள்ளார்.

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளை கண்காணித்து நிர்வகிக்க “மாநகராட்சி கல்வி அலுவலர்” பணியிடம் தோற்றுவிக்க அரசு அனுமதி கோர மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.2072/2009/கே7

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 225 நாள் 29.01.2010</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 29

கடந்த 13.1.2010 ம் தேதியன்று நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி, மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மாா்கெட் - சுங்கம் வசூலிக்கும் உரிமை – மாநகராட்சி பைலா கட்டணத்தை மாற்றி அமைக்க திரு. M. செல்வம், திருமதி. S.ஜெயா ஆகிய குத்தகைதாரா்கள் கோரியது.

-------

கோயம்புத்தூா் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி குத்தகைதாரா் திரு. M. செல்வம், மற்றும் மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மாா்கெட் குத்தகைதாரா் திருமதி. S.ஜெயா ஆகியோா் தங்களது 10.09.2009 ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி மாா்கெட்டை சுங்கம் வசூலிக்கும் உரிமைக்கு ஏலம் எடுத்து நடத்தி வருவதாகவும், மேற்படி மாா்கெட்டில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னால் நிா்ணயிக்கப்பட்ட கட்டணத்தை இதுவரை நிா்ணயம் செய்து மாநகராட்சி பைலா வெளியிட்டு வருகிறது என்றும் ஆண்டுக்காண்டு சுங்க ஏலத்தொகையை 15% சதவீதம் முதல் 100% சதவீதம் வரை வியாபார போட்டியினால் உயா்த்த வேண்டி வருகிறது என்றும் 2009-2010 ஆண்டில் கீழ்கண்டவாறு கட்டணங்களை மாற்றி அமைத்து புதியதாக கட்டணம் நிா்ணயம் செய்துதரக் கோரியுள்ளனா் மற்றும் சில இனங்களுக்கான கட்டணங்களை பைலாவில் சோ்க்கவும் கோரியுள்ளனா்.

வாழைக்காய் மண்டியில் (தடாகம் ரோடு )

| பைலாவில் உள்ள | தற்போதைய கட்டணம் | மாற்றியமைக்க வேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 1) லாரி ஒன்றுக்கு | ரூ.30.00 | ரூ.40.00 |
| 2) வாழைத்தாா் ஒன்றுக்கு | ரூ. 0.35 | ரூ. 2.00 |
| 3) டெம்போ ஒன்றுக்கு | ரூ.15.00 | ரூ.20.00 |

| பைலாவில் உள்ள | தற்போதைய கட்டணம் | சோ்க்கப்பட வேண்டிய இனங்கள் மாற்றியமைக்க வேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 1) ஆட்டோ நடை ஒன்றுக்கு | ----- | ரூ.15.00 |
| 2) கை வண்டி ஒன்றுக்கு | ரூ.1.50 | ரூ.10.00 |
| 3) இரண்டு சக்கர வாகனம் | ரூ.1.50 | ரூ. 5.00 |
| 4) சைக்கிள் | ரூ.0.75 | ரூ. 2.00 |

மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மாா்கெட்

| | தற்போதைய கட்டணம் | மாற்றி அமைக்க வேண்டிய கட்டணம் |
|---|---|---|
| 1) A, B,C.D. பிளாக் 5 X 6 அடி | ரூ. 6.00 | ரூ. 20.00 |
| 2) லாரி 1க்கு | ரூ.30.00 | ரூ. 40.00 |
| 3) டெம்போ 1க்கு | ரூ.15.00 | ரூ. 20.00 |
| 4) மொபட் ஸ்கூட்டா் 1க்கு | ரூ. 3.00 | ரூ. 5.00 |
| 5) இருசக்கர வாகனம் (சைக்கிள்) | ரூ. 1.00 | ரூ. 2.00 |
| 6) தரை கடைகள் 4 x 4 | ரூ. 3.00 | ரூ. 15.00 |
| 7) தக்காளி கூடை ஒன்றுக்கு | ரூ. 1.50 | ரூ. 2.00 |

சோ்க்கப்பட வேண்டிய இனங்கள்
தலைச்சுமைகள்

| | |
|---|---|
| 1) தேங்காய் மூட்டை ஒன்றுக்கு | ரூ. 3.00 |
| 2) காய்கறி மூட்டை ஒன்றுக்கு | ரூ. 3.00 |

| | |
|---|---|
| 3) மளிகை சாமான்கள் அனைத்துக்கும் மூட்டை ஒன்றுக்கு | ரூ. 3.00 |
| 4) எண்ணெய், பிஸ்கட், சோப்பு, டின் ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 5) பாரம் ஏற்றி வரும் இரண்டு சக்கர வாகனம் நடை ஒன்றுக்கு | ரூ. 5.00 |
| 6) ஆட்டோ நடை ஒன்றுக்கு | ரூ. 15.00 |
| 7) காளி பிளவர் லோடு ஒன்றுக்கு | ரூ. 250.00 |
| 8) பூசணிக்காய் லோடு ஒன்றுக்கு | ரூ. 350.00 |
| 9) வாழைத்தார் ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 10) கை வண்டி நடை ஒன்றுக்கு | ரூ, 15.00 |
| 11) இலை கட்டு ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 12) தக்காளி டிப்பர் 25 கிலோ ஒன்றுக்கு | ரூ. 3.00 |

மேற்குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை மாற்றியமைத்து நிர்ணயம் செய்ய வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தனது தீர்மான எண். 2 நாள்.11.01.2010-ன்மூலம்,

1) பொருளில் 8 டன் கொள்ளவு கொண்ட லாரிக்கு கட்டணமாக ரூ.60/-, 8 டன்னுக்கு மேல் கொள்ளவு கொண்ட லாரிக்கு கட்டணமாக ரூ.100/- டெம்போ ஒன்றுக்கு ரூ.50/-, ஆட்டோ நடை ஒன்றுக்கு ரூ.40/-, கை வண்டி ஒன்றுக்கு ரூ.5/-, தக்காளி டிப்பர் 25 கிலோ ஒன்றுக்கு ரூ.5/- நிர்ணயம் செய்யவும், பிற இனங்களுக்கு பொருளில் மாற்றியமைக்க நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ள கட்டணங்களை நிர்ணயம் செய்து மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பபட்டது.

2) மேட்டுப்பாளையம் ரோடு, அண்ணா தினசரி மார்க்கெட் வரிசை எண்.1 கடைக்கு ரூ.25/-, வரிசை எண்.6/-, கடைக்கு ரூ.20/- நிர்ணயம் செய்து பரிந்துரை தீர்மானிக்கப்பட்டது.

3) இக்கட்டண விகிதங்களை நான்கு மண்டங்களிலும் உள்ள ஏல இனங்களுக்கான கட்டனமாக நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

4) இக்கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமலுக்கு கொண்டுவர பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

5) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் கூடை அல்லது ஒரு கூடை அளவுள்ள தலைச் சுமைக்கு ரூ.3/-, பூ பாரம் ஏற்றிய சைக்கிள் 1/-க்கு ரூ.6/-, கமிஷன் வியாபாரத்திற்கு வரும் பூக்கூடை ஒன்றுக்கு ரூ.6/-, சாமந்திப்பூ, அரளிப்பூ மருகு கட்டு அடங்கிய சிறிய கூடை ஒன்றுக்கு ரூ.3/- நிர்ணயம் செய்தும், 1.4.2010 முதல் இக்கட்டண விகிதங்களை அமல்படுத்தவும் மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே மேற்படி கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமல்படுத்தியும், இக் கட்டணங்களை நான்கு மண்டலங்களுக்கு நடைமுறை படுத்தவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மா எண்.2, நாள்.11.01.2010 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு-</u> அனுமதிக்கலாம். ந.க.எண்.12496/2008/அ1 (மே)

## மாநகர மன்ற தீர்மானம் எண் 226 நாள் 29.01.2010

1) பொருளில் மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் வரிசை எண் 6 தரைக்கடைகள் 6’ x 6’ என பதிவு செய்யப்பட்டது.

2) மேற்கு மண்டலத்தில் உள்ள மார்க்கெட்டுகளில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அ) தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி

வாழைக்காய் மண்டியில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1) லாரி நடை ஒன்றுக்கு | ரூ. 40.00 |
| 2) வாழைத்தார் ஒன்றுக்கு | ரூ. 1.00 |
| 3) டெம்போ நடை ஒன்றுக்கு | ரூ. 20.00 |

புதிய இனங்கள்

| | |
|---|---|
| 1) ஆட்டோ நடை ஒன்றுக்கு | ரூ.10.00 |
| 2) கை வண்டி நடை ஒன்றுக்கு | ரூ. 5.00 |
| 3) இரண்டு சக்கர வாகனம் | ரூ. 5.00 |
| 4) சைக்கிள் | ரூ. 1.00 |

ஆ) மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்

மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 1) A,B,C,D, பிளாக் 5’ X 6’ | ரூ.15.00 |
| 2) லாரி நடை ஒன்றுக்கு | ரூ.40.00 |
| 3) டெம்போ நடை ஒன்றுக்கு | ரூ.20.00 |
| 4) மொபட் ஸ்கூட்டர் நடை ஒன்றுக்கு | ரூ. 5.00 |
| 5) இரு சக்கர வாகனம் (சைக்கிள்) | ரூ. 1.00 |
| 6) தரை கடைகள் (6’ X 6’) | ரூ. 10.00 |
| 7) தக்காளி கூடை ஒன்றுக்கு | ரூ. 1.50 |

புதிய இனங்கள்

| | |
|---|---|
| 1) தேங்காய் மூட்டை ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 2) காய்கறி மூட்டை ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 3) மளிகை சாமான்கள் அனைத்துக்கும் மூட்டை ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 4) எண்ணெய், பிஸ்கட், சோப்பு, டின் ஒன்றுக்கு | ரூ. 1.00 |
| 5) பாரம் ஏற்றி வரும் இரண்டு சக்கர வாகனம் நடை ஒன்றுக்கு | ரூ. 5.00 |
| 6) ஆட்டோ நடை ஒன்றுக்கு | ரூ. 10.00 |
| 7) காளி பிளவர் லோடு ஒன்றுக்கு | ரூ.150.00 |
| 8) பூசணிக்காய் லோடு ஒன்றுக்கு | ரூ.200.00 |
| 9) வாழைத்தார் ஒன்றுக்கு | ரூ. 1.00 |
| 10) கை வண்டி நடை ஒன்றுக்கு | ரூ. 5.00 |
| 11) இலை கட்டு ஒன்றுக்கு | ரூ. 2.00 |
| 12) தக்காளி டிப்பர் 25 கிலோ ஒன்றுக்கு | ரூ. 3.00 |

**<u>இ) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்</u>**

**பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 1) கூடை அல்லது ஒரு கூடை அளவுள்ள தலைச்சுமைக்கு | ரூ. 2.00 |
| 2) பூ பாரம் ஏற்றிய சைக்கிள் ஒன்றுக்கு | ரூ. 4.00 |
| 3) கமிஷன் வியாபாரத்திற்கு வரும் பூக்கூடை ஒன்றுக்கு | ரூ. 4.00 |
| 4) சாமந்திப்பூ, அரளிப்பூ, மருகு கட்டு அடங்கிய சிறிய கூடை ஒன்றுக்கு | ரூ. 2.00 |

3) **நான்கு மண்டலங்ளிலும் உள்ள ஆடு / மாடு அறுவை மனைகளில் ஆடு / மாடு ஒன்றுக்கு அறுவை செய்வதற்கு ரூ.10.00 கட்டணம் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

4) **இக் கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமல் படுத்த தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 30

**கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அலுவலக ஆய்வு வாகனம் TN37-Q9181, அம்பாசிடர் கார் கடந்த 29-01-1998 அன்று வாங்கப்பட்டது. மேற்படி வாகனம் வாங்கப்பட்டு 12 வருடங்கள் ஆகி விட்டதன் காரணத்தினால் இவ்வாகனத்தில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டுவதனால் ஆணையரின் ஆய்வுப் பணிகள் பெரிதும் பாதிப்படைகின்றது. மேற்கூறிய சிரமங்களை தவிர்க்க இவ்வாகனத்தை கழிவு செய்து அதற்கு பதிலாக ஓர் புதிய மஹேந்திரா ஸ்கார்ப்பியோ ஈப்பினை வாங்கலாம்.**

**எனவே ஆணையாளர் அவர்களின் ஆய்வுப் பணிக்கென ஓர் புதிய மஹேந்திரா ஸ்கார்ப்பியோ ஈப்பினை ரூ. 11,00,000/- செலவினத்தில் DGS&D விலை விகிதத்திலோ அல்லது அரசு நிறுவனங்களுக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள சிறப்பு விலை விகிதத்திலோ வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் அனுமதி பெற மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்படி வாகனத்தை வாங்குவதற்கு ஆகும் செலவினத்தை 2009-2010ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் 3107 - இலகுரக வாகனம் என்ற தலைப்பின் கீழ் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**

**ந.க.எண் 850 /2010/MD2**

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 227 நாள் 29.01.2010</u>

**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 31

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.48, மேதவர் வீதி பகுதியில், மாநகராட்சிக்கு சொந்தமான இடம் (T.S.No.938/1, 938/2,939/1,939/2,940/1,940/2,943/2,946/1,946/2, 946/3, 947/1, 947/2, 947/3, 948/1, 948/2 மற்றும் 948/3) 2279.50 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ள பழைய குடியிருப்பில் வாடகை அடிப்படையில் நீண்ட பல வருடங்களாக குடியிருந்து குடியிருப்பு கட்டிடம் மிகப் பழையதாக இருப்பதை ஜவஹர்லால் நேரு நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ், நீண்ட நாட்களாக வாழ்ந்து வரும் மக்களை கணக்கெடுப்பு செய்து அக்குடும்பங்கள் அவ்விடத்திலேயே வாழத்தக்க வகையில் அடுக்குமாடி கட்டிடமாக கட்ட அரசு ஒப்புதல் பெற்று கட்டுமானம் செய்வது தொடர்பாக.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.48, மேதவர் வீதி பகுதி, மாநகராட்சிக்கு சொந்தமான இடம்.T.S.No.938/1 ,938/2, 939/1, 939/2, 940/1, 940/2, 943/2, 946/1, 946/2, 946/3, 947/1, 947/2, 947/3, 948/1, 948/2 மற்றும் 948/3, 2279.50 ச.மீ பரப்பளவில் உள்ளது. இப்பகுதியில் கட்டப்பட்டுள்ள பழைய குடியிருப்பில் வாடகை அடிப்படையில் நீண்ட பல வருடங்களாக குடியிருந்து வரும் குடியிருப்பு கட்டிடம் மிகப் பழையதாக இருக்கிறது.

ஜவஹர்லால் நேரு நகர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நீண்ட நாட்களாக வாழ்ந்து வரும் மக்களை கணக்கெடுப்பு செய்து அக்குடும்பங்கள் அவ்விடத்திலேயே வாழத்தக்க வகையில் அடுக்குமாடி கட்டிடமாக அரசு ஒப்புதல் பெற்று கட்டுமானம் செய்வது தொடர்பாக நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழு ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தனது தீர்மானம் எண். 80 நாள். 28.1.2010 ன் மூலம் "மாமன்ற உறுப்பினர் வார்டு 48 அவர்களின் வேண்டுகோளின்படி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றி உள்ளதின்படி, மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.539/ 10/ எச்-1 (மே)

### மாநகர மன்ற தீர்மானம் எண் 228 நாள் 29.01.2010

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி